# நம்மிடையே தேவனுடைய இராஜ்ஜியம்

Transcribed from a message spoken in May 2016 in CReNIO, Chennai

By *Nirmal Xavier*

## தேவனுடைய இராஜ்ஜியமே தேவனுடைய நோக்கம் நிறைவேறுதற்கான ஒரே வழி

நாம் பாடிய "உம்மைப்போல் ஆவேனாக" என்ற பாடல் உண்மையாகவே தேவனுடைய விருப்பத்தை நமக்குக் காண்பிக்கிறது. எல்லா விதத்திலும் நாம் இயேசுகிறிஸ்துவைப்போல் மாற வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். இது உண்மையாகவே எவ்வளவு உயர்ந்த விருப்பம்! இது உண்மையாகவே தேவனுடைய எவ்வளவு உயர்ந்த நோக்கம்! நம்முடைய உண்மையான நிலை என்னவென்றால் நாம் மிகவும் குறைவானவர்கள், தாழ்விடங்களில் வாழ்கிறவர்கள். ஆனால், இயேசுகிறிஸ்து மிகவும் உயர்ந்தவர், எல்லா விதத்திலும் உயர்ந்தவர். அவர் இன்று தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். இந்த இயேசுகிறிஸ்துவின் குணத்திலும், கட்டமைப்பிலும், உள்ளமைப்பிலும் நாம் பங்குபெற வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். தேவனுடைய இந்த உயர்ந்த விருப்பத்தை நம் எல்லாருடைய வாழ்க்கையிலும் தேவன் நிறைவேற்ற விரும்புகிறார்.

இந்த உயர்ந்த நோக்கத்தை, தேவனுடைய விருப்பத்தை, நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்கு தேவனுடைய ராஜ்ஜியமே வழி. தேவனுடைய இராஜ்ஜியம் இல்லையென்றால் தேவனுடைய நோக்கம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறாது. தேவனுடைய இந்த உயர்ந்த நோக்கம் நம்முடைய வாழ்க்கையிலே நிறைவேறாது. எனவேதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தபோது "*உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக*" (மத். 6) என்று ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். தேவனுடைய நோக்கம் நிறைவேறுவதற்கு தேவனுடைய இராஜ்ஜியம் அந்த அளவுக்கு அவசியமானது.

## இரண்டு இராஜ்ஜியங்களும், அதன் வேறுபாடுகளும்

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்ந்த எல்லா மனிதர்களும் இப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். "*என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களுக்குள் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்,*" (கலா. 4:19) என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்ந்த பவுல் மனிதர்களுக்குள், தேவனுடைய மக்களுக்குள், கிறிஸ்து உருவாக்கப்பட வேண்டும் என்று வாஞ்சித்தார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்கள் எல்லாரும் தேவனுடைய இந்த நோக்கம் மனிதர்களுடைய வாழ்க்கையில், தேவனுடைய மக்களின் வாழ்க்கையில், நிறைவேற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். தேவனுக்கு அப்படிப்பட்ட ஒரு நோக்கம், விருப்பம், உண்டு.

இரண்டு ராஜ்ஜியங்கள் உள்ளன. ஒன்று மனிதனுடைய இராஜ்ஜியம், மற்றொன்று தேவனுடைய இராஜ்ஜியம். தேவனை நம்பாமல் நாமே ஒரு நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது மனிதனுடைய இராஜ்ஜியம். ஆனால், தேவனை நம்பி, தேவனைச் சார்ந்து, தேவனோடு நாம் அந்த நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தேவனுடைய இராஜ்ஜியம்.

முதல் மனிதனாகிய ஆதாமுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தில் பங்குபெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால், அவன் அந்த வாய்ப்பை நழுவவிட்டான், அதன் விளைவாக விழுந்துபோனான். ஆதியாகமம் 2, 3ஆம் அதிகாரங்களில் பார்ப்பதுபோல, மனிதன் ஜீவ விருட்சத்தில் பங்கடைய வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். ஆனால், "தேவன் இல்லாமல் ஒரு நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம்," என்ற சாத்தானுடைய பொய்யை நம்பி மனிதன் விழுந்துபோனான்.

இதற்கு ஒத்த அதே சூழ்நிலை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு வருகிறது. மத்தேயு 4ஆம் அதிகாரத்தில் நாம் அதைப் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து 40 நாட்கள் உபவாசித்தபின்பு, பசியாயிருக்கிறார். அப்போதும் சோதனைக்காரன் அதே பொய்யைச் சொல்கிறான். "நீர் தேவனை நம்பாமல், தேவனைச் சார்ந்து கொள்ளாமல், இந்த நன்மையை, இந்தத் திருப்தியை, நீர் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கல்லுகளை அப்பங்களாக்கி சாப்பிடும்," என்று அவன் கூறுகிறான். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முற்றிலும் தேவனை நம்பி, தேவனைச் சார்ந்து வாழ்கின்ற நபராக இருக்கிறார். யோவான் 5:19 இல் வாசிப்பதுபோல "*பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்*". எனவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனை நம்பி, தேவனோடு, தேவனால் அந்த நன்மையைப் பெறுகிறார். "*மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு*

*வார்த்தையினாலும் பிழைப்பான்,"* என்பதை அவர் அங்கு நிரூபிக்கிறார். அதற்குப் பின்பு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தேவதூதர்கள் வந்து கவனிக்கிறார்கள், பணிவிடை செய் கிறார்கள்.

என்றைக்குமே நாம் மனிதனுடைய கரத்திலிருந்து ஒரு நன்மையைப் பெறுவதைவிட தேவனிடமிருந்து ஒரு நன்மையைப் பெறுவது சிறப்பான நன்மையாக இருக்கும்.

**தேவனுடைய இராஜ்ஜியத்தில் பங்குபெறுதல்**

தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் தேவன் அங்கு செயல்படுவார், தேவன் அங்கு ஆளுகைசெய்வார். எங்கு தேவனுடைய சித்தம் தங்குதடையின்றி செயல்படுகிறதோ அது தேவனுடைய இராஜ்ஜியம். பரலோ கத்தில் தேவனுடைய சித்தம் எந்தவிதத் தங்குதடையுமின்றி செயல்படுகிறது. எனவே, பரலோகத்தில் தேவ னுடைய இராஜ்ஜியம் இருக்கிறது. அதே இராஜ்ஜியம் இந்தப் பூமியிலும் செயல்படவேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். பூமியிலும் தேவனுடைய சித்தம் எந்தவிதத் தங்குதடையுமின்றி செயல்பட வேண் டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த விதத்தில்தான் அவருடைய நித்திய நோக்கத்தை அவர் தம் முடைய மக்களுடைய வாழ்க்கையில் நிறைவேற்றுகிறார்.

இது உண்மையாகவே ஒரு நற்செய்தி. நாம் இதை மிகவும் மகிழ்ச்சியாக மனிதர்களுக்கு அறிவிக்க வேண்டும். "தேவனுடைய இராஜ்ஜியம் இங்கு வந்திருக்கிறது; அது இங்கு இருக்கிறது. அதில் நீங்கள் பங்குபெற முடியும்," என்பது நற்செய்தி. *"மனந்திரும்புங்கள்; பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது."* (மத். 4) என்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார். "பரலோக இராஜ்ஜியம், தேவனுடைய இராஜ்ஜியம், இங்கிருக்கிறது. நீங்கள் அதில் பங்குகொள்ள முடியும், அதில் பங்குபெற முடியும், நீங்கள் அதில் வாழ முடியும்," என்பது நற்செய்தி. இந்த நற்செய்தியைத்தான் அவர் எல்லாப் பட்டணங்களுக்கும் சுற்றித்திரிந்து அறிவித்தார். அவருடைய சீடர்களையும் இதைத்தான் அறிவிக்கச் சொன்னார். "பரலோக இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அறிவியுங்கள். தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் மனிதர்கள் பங்குகொள்ள முடியும், பங்குபெற முடியும் என்பதை அறிவியுங்கள்," என்று தேவன் சொல்லுகிறார்.

*"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தி னாலே ஞானஸ்நானம் கொடுங்கள்,"* (மத். 28:19) என்றால் என்ன பொருள்? நாம் சகல தேசங்களையும் இயேசுகிறிஸ்துவுக்கு சீடர்களாக்குவது என்பது உண்மையாகவே அவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜி யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அதாவது "தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நீங்கள் பிரவேசிக்க முடியும். தேவனுடைய இராஜ்ஜியம் இங்கு வந்திருக்கிறது. இவ்வளவு நாள் உங்களுடைய வாழ்க்கைக்கும் தேவனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால் இப்போது தேவனுக்கும் உங்க ளுடைய வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. தேவனுடைய இராஜ்ஜியம் இங்கு சமீபத்தி லிருக்கிறது. இங்கு வந்திருக்கிறது. அதிலே நீங்கள் பங்கடைய முடியும்," என்ற சுவிசேஷத்தை அறி வித்து, அவர்களைத் தேவனுடைய இராஜ்ஜியத்தில் உட்பிரவேசிக்கப் பண்ணி, தேவனுடைய இராஜ்ஜியத் தில் வாழச் செய்து, அதன்மூலம் அவர்களை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சீடர்களாக மாற்று வதையே அவர் கூறுகிறார்.

சீடர்கள் என்றால் வெறுமனே *இயேசு, இயேசு* என்று சொல்வதோ அல்லது இயேசுகிறிஸ்துவினுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு கோஷம் போடுவதோ அல்ல. அவர்கள் உண்மையான சீடர்கள் அல்ல. உண்மை யாகவே தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற ஒரு கூட்டம் மக்களே இயேசுகிறிஸ்துவினுடைய உண்மையான சீடர்கள். "பலர் என்னுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள்," என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். *"கர்த்தாவே, கர்த்தாவே! உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம். உம்முடைய நாமத்தினாலே பேய்களை விரட்டி னோம்,"* என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால், *"உங்களை அறியேன்,"* என்பது அவருடைய பதில். *"அக் கிரமச்செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள்,"* என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் உட்பிரவேசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்ந்து, உண்மையாகவே நம்முடைய வாழ்க்கை கனிநிறைந்த வாழ்க்கையாக மாறும்போது மட்டுமே தேவன் அப்படிப்பட்ட மக்களை விரும்பு கிறார். அப்போது மட்டுமே அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய நோக்கம் நிறைவேறுகிறது.

இயேசுகிறிஸ்து வெறுமனே "பரலோக இராஜ்ஜியத்தில் நீங்கள் பிரவேசிக்க முடியும்," என்பதை மட்டும் கூறவில்லை. பரலோக இராஜ்ஜியத்தில் எப்படிப் பிரவேசிக்க முடியும் என்பதையும் அவர் கூறுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் பிரவேசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் வாழ்ந்து,

தொடர்ந்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழும்போது மட்டுமே தேவனுடைய நித்திய நோக்கம் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறும். இதுவே என்னுடைய பாரம்.

என்னுடைய பாரத்தை நான்கு குறிப்புகளாக நான் பிரித்து வைத்துள்ளேன். முதலாவது குறிப்பு **தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் உட்பிரவேசிக்கும் வழி.** இரண்டாவது, தேவனுடைய **இராஜ்ஜியத்தைப் பற்றிய நான்கு மிக முக்கியமான உண்மைகள், நிஜங்கள், மெய்கள்**. மூன்றாவது, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கான வழி.** நான்காவது, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதினால் என்னுடைய வாழ்க்கையில் ஏற்படுகிற விளைவு.** இந்த நான்கு குறிப்புகளையும் எடுத்துக்காட்டுகளோடு நான் விளக்க முயற்சிசெய்கிறேன்.

## I. தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் நுழையும் வழி – மறுபடிபிறத்தல்

முதல் குறிப்பு, தேவனுடைய இராஜ்ஜியத்தில் உட்பிரவேசிக்கும் வழி அல்லது நுழையும் வழி. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டும், உட்பிரவேசிக்க வேண்டும் அல்லது நுழைய வேண்டும் என்றால் நாம் மறுபடி பிறக்க வேண்டும். *"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க மாட்டான் அல்லது தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமாட்டான்,"* (யோவான் 3:3) என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறுகிறார். நாம் மறுபடியும் பிறக்கும்போது ஒரு புதிய ஜீவனைப் பெறுகிறோம். இந்தப் புதிய ஜீவனைப் பெறும்போது மட்டுமே நாம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும். இந்தப் புதிய ஜீவன் இல்லாமல் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியாது; தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண முடியாது.

இயற்கையான மனிதர்களால் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஒருபோதும் காண முடியாது. அவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றிய செய்திகள் பைத்தியமாகத் தோன்றும். *"ஜென்மசுபாவமான மனிதன் தேவனுக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாய் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபடி ஆராய்ந்து நிதானிக்கிறவைகளானபடியால் அவைகளை அறியவுமாட்டான். ஆனால் ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்"* (1 கொரி. 2:14-15). உண்மையாகவே நாம் தேவனுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்போது மட்டுமே நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் புரிந்துகொள்ள முடியும், தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியும்.

ஏனென்றால், இந்த இராஜ்ஜியத்தினுடைய இயற்கை என்னவென்றால் அது ஆவிக்குரிய மண்டலம், அது பரத்திற்குரிய மண்டலம். அதை ஜென்மசுபாவமான இயற்கையான மனிதனால் புரிந்துகொள்ள முடியாது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, *"நானே ஜீவ அப்பம், நானே ஜீவத் தண்ணீர். என் மாம்சம் உண்மையான போஜனம் அல்லது மெய்யான போஜனம். என் இரத்தம் மெய்யான பானம். என்னைப் புசிக்கிறவன் என்னாலே பிழைப்பான்,"* (யோவான் 6) என்றெல்லாம் கூறும்போது அவருடைய சீடர்களே *"இது கடினமான உபதேசமாக இருக்கிறது. இதை யார் கேட்பார்கள்,"* (யோவான் 6:60) என்று சொல்லுகிறார்கள், முறுமுறுக்கிறார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, *"ஆவியே உயிர்ப்பிக்கும். மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"* (யோ.6:63) என்று தெளிவாகக் கூறுகிறார். *"நானே ஜீவ அப்பம். நானே ஜீவத் தண்ணீர். என்னைப் புசிக்கிறவன் என்னாலே பிழைப்பான். என்னுடைய மாம்சம் உண்மையான போஜனம். என்னுடைய இரத்தம் உண்மையான பானம்,"* என்றால் நாம் இயேசுகிறிஸ்துவில் பங்கடைய முடியும், இயேசுகிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியங்களில், இயேசுகிறிஸ்துவின் வளங்களில் நாம் பங்கடைய முடியும் என்பதையே அவர் கூறுகிறார்.

எனவே தேவனுடைய இராஜ்ஜியம் என்பது ஒரு பரத்திற்குரிய மண்டலம். இதை ஒரு ஜென்மசுபாவமான மனிதனால், ஒரு மாம்சத்திற்குரிய மனிதனால், ஒரு இயற்கையான மனிதனால் புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் உட்பிரவேசிக்கும் ஒரே வழி நாம் மறுபடியும் பிறப்பது, தேவனுடைய ஜீவனை பெற்றுக்கொள்வது.

## II. தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றி முக்கியமான நான்கு உண்மைகள்

என்னுடைய இரண்டாவது குறிப்பு, தேவனுடைய இராஜ்ஜியத்தைக்குறித்த நான்கு முக்கியமான உண்மைகள், நிஜங்கள், மெய்கள். ஏன் இதை நான் உண்மைகள் என்று கூறுகிறேன் என்றால் பல வேளைகளில் நாம் இராஜ்ஜியத்தில் வாழும்போது இந்த நான்கு உண்மைகளும் பொய் என்று சாத்தான் கூறுவான். "நீ நம்பிக்கொண்டிருக்கிற இந்த நான்கு உண்மைகளும் உண்மையல்ல, பொய்," என்று அவன் கூறுவான். ஆனால், இவை உண்மைகள். இவை தேவனுடைய மக்களின் வாழ்க்கையில் நடந்தவை, நடப்பவை.

## *1. தேவனுடைய மக்களோடு தேவனுக்கு நேரடித் தொடர்பு*

முதல் உண்மை, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்களின் வாழ்க்கையோடு தேவனுக்கு நேரடியான தொடர்பு உண்டு**. தேவன் அவர்கள் வாழ்க்கையில் செயல்படுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்களின் வாழ்க்கையோடு தேவன் நேரடியாகச் செயல்படுகிறார். மனிதர்களும் தேவனோடு இணைந்து செயல்படுகின்றனர். "உங்களுடைய நிலைமையைப் பாருங்கள்," என்று சாத்தான் சொல்வான். "உங்களுடைய வாழ்க்கைக்கும் தேவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? உங்களுடைய வாழ்க்கை இவ்வளவு குறைவான தரத்தில் இருக்கிறது. உண்மையாகவே உங்களுடைய வாழ்க்கையில் தேவன் செயல்படவில்லை," என்று சாத்தான் சொல்வான். ஆனால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் வாழ்ந்தால் கண்டிப்பாக தேவனுக்கும் நம்முடைய வாழ்க்கைக்கும் நேரடியான ஒரு தொடர்பு உண்டு. தேவன் நம்முடைய வாழ்க்கையோடு செயல்படுவார்.

### ஈசாக்கின் வாழ்க்கையில் தேவனுடைய நேரடிச் செயல்பாடு

நாம் இதை ஈசாக்கின் வாழ்க்கையில் பார்க்கலாம் (ஆதி. 26). ஈசாக்கு பஞ்சத்தின்போது கேரார் என்னும் ஒரு இடத்திற்குச் செல்கிறான். அங்கு அபிமெலேக்கு இராஜாவாக இருக்கிறான். அபிமெலேக்கினிடத்திற்குச் செல்கிறான். "நீ இந்த இடத்தில் வாசம்பண்ணு," (வ. 3) என்று தேவன் சொல்லுகிறார். "நான் உன்னோடு இருக்கிறேன். நான் உன்னை ஆசீர்வதிப்பேன்". "இந்த இடத்திற்குச் சென்றால் அந்த இடத்தில் சமாதானத்தோடு வாழ முடியுமா!" என்றெல்லாம் யோசிக்காமல் அவன் தேவனுடைய சித்தத்திற்கு இணங்கிச் செயல்படுகிறான்; அங்கு வாசம்பண்ணுகிறான். அங்கு விதை விதைக்கிறான். அப்பொழுது அவன் நூறுமடங்கு பலன் பெறுகிறான். அதைக் கண்டு பெலிஸ்தர்கள் பொறாமை கொள்கிறார்கள். தேவனுடைய கரம் ஈசாக்கினுடைய வாழ்க்கையில் அந்த அளவுக்குச் செயல்படுகிறது. மனிதர்கள் பொறாமை கொள்கிற அளவுக்கு தேவனுடைய செயல்பாடு ஈசாக்கினுடைய வாழ்க்கையில் இருக்கிறது. தேவன் வல்லமையோடு ஈசாக்கினுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார். ஆனாலும், அவர்கள் அவனை ஒடுக்கிறார்கள், நெருக்கிறார்கள். அதன்பிறகு அபிமெலேக்கு ஈசாக்கைச் சந்திக்கிறான். "நீ எங்களைவிட்டுப் போய்விடு. நீ எங்களைவிடப் பலத்தவனாகிறாய்," என்று ஈசாக்கிடம் கூறுகிறான். ஈசாக்கும் செல்கிறான்.

பின்பு ஒருநாள் அபிமெலேக் அவனுடைய அதிகாரிகளோடு ஈசாக்கைச் சந்திக்க வருகிறான். அப்பொழுது அபிமெலேக்கு ஈசாக்கிடம் என்ன கூறுகிறான் என்றால் "மெய்யாகவே தேவன் உன்னோடு இருக்கிறார் என்பதைக் கண்டோம். உண்மையாகவே தேவன் உன்னோடு இருக்கிறார் என்பதைக் காண்கிறோம். நீர் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே," என்று அவன் பயந்து "*நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடு அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடி நாம் உடன்படிக்கை பண்ணிக்கொள்வோம்,*" (ஆதி. 26:28, 29) என்று கூறுகிறான். தேவன் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார் என்றால் மனிதர்கள் பொறாமைகொள்கிற அளவுக்குத் தேவன் மனிதர்களுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார்; தேவனுடைய மக்களின் வாழ்க்கையில் செயல்படுகிறார். மனிதர்கள் பயப்படுகிற அளவிற்கு தேவன் மனிதனுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார்; அவருடைய மக்களின் வாழ்க்கையில் செயல்படுகிறார். தேவன், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற மனிதர்களுடைய வாழ்க்கையில் செயல்படுகிறதை அவருடைய மக்கள் விலையேறப்பெற்றதாக எண்ணுகிறார்கள். "தேவன் என்னுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார்," என்பதை மக்கள் விலையேறப்பெற்றதாக எண்ணுகிறார்கள்.

### இஸ்ரயேல் மக்களோடு தேவனுடைய நேரடிச் செயல்பாடு

யோசுவா 22ஆம் அதிகாரத்தில் ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. அங்கு இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய காணியாட்சிக்குத் திரும்புகிறார்கள். மோசே ஏற்கெனவே யோர்தானுக்கு அப்புறத்தில் ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் என இரண்டரை கோத்திரத்திற்கும் காணியாட்சி அங்கு கொடுக்கிறார். மற்றவர்களுக்குக் கானான் தேசத்தில் காணியாட்சி கொடுக்கிறார்கள். இவர்கள் தங்கள் காணியாட்சிக்குத் திரும்பி வருகிறார்கள். அப்பொழுது இந்த இரண்டரை கோத்திரங்களும் யோர்தானுக்கு அப்புறத்தில் தேவனுடைய பலிபீடத்திற்கு ஒத்த ஒரு பீடத்தைக் கட்டுகிறார்கள். கானான் தேசத்தில் வாழ்கிற அந்த இஸ்ரயேல் மக்களுக்கு அது தெரிந்தவுடனே அவர்கள், "தேவனுக்கும் எங்களுக்கும் கோபமூட்டுவதற்காக இப்படிப்பட்ட காரியங்களை நீங்கள் செய்கிறீர்களா?" என்று இவர்களோடு போரிடுவதற்காக வருகிறார்கள். ஆனால், அதற்கு அந்த இரண்டரை கோத்திரத்தினுடைய மறுமொழியை நாம் வாசிக்கலாம். "*தேவாதி தேவனாகிய கர்த்தர், தேவாதி தேவனாகிய கர்த்தரே, அதை அறிந்திருக்கிறார். இஸ்ரயேலரும் அறிந்துகொள்வார்கள். அது இரண்டகத்தினாலாவது, கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமான துரோகத்தினாலாவது செய்யப்பட்டதானால், இந்நாளில் அவர் எங்களைக் காப்பாற்றாமல் இருக்கக்கடவர். ஒரு காரியத்*

*தைக்குறித்து நாங்கள் எங்களுக்கு அந்தப் பலிபீடத்தைக் கட்டடினதேயல்லாமல், கர்த்தரைப் பின்பற்றாத படிக்கு விலக்குவதற்காவது, அதின்மேல் சர்வாங்கதகனபலிகளையாகிலும், போஜனபலியையாகிலும் சமாதான பலிகளையாகிலும் செலுத்துகிறதற்காவது அதைச் செய்ததுண்டானால், கர்த்தர் அதை விசாரிப்பாராக. நாளைக்கு உங்கள் பிள்ளைகள் எங்கள் பிள்ளைகளை நோக்கி: இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் என்ன? உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே கர்த்தர் யோர்தானை எல்லையாக வைத்தார். கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை என்று சொல்லி, எங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படா திருக்கச் செய்வார்கள் என்கிற ஐயத்தினாலே நாங்கள் சொல்லிக்கொண்டது என்னவென்றால்: கர்த்தரிடத் தில் உங்களுக்குப் பங்கில்லை என்று உங்கள் பிள்ளைகள் நாளைக்கு எங்கள் பிள்ளைகளோடு சொல் லாதபடிக்குமே, ஒரு பலிபீடத்தை நமக்காக உண்டுபண்ணுவோம் என்றோம். நாளைக்கு எங்களோடாவது, எங்கள் சந்ததியாரோடாவது அப்படிச் சொல்வார்களானால், அப்பொழுது சர்வாங்கதகனத்திற்கும் அல்ல, பலிக்கும் அல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே சாட்சியாக எங்கள் பிதாக்கள் உண்டுபண்ணின கர்த்தருடைய பலிபீடத்தின் சாயலான பீடத்தைப் பாருங்கள் என்று சொல்லலாம் என்றோம்"* (யோசுவா 22:22-28). இது அந்த இரண்டரை கோத்திரங்களுடைய மறுமொழி. ஏன் நாங்கள் அந்த பீடத்தை கட்டி னோம் என்பதற்கான அந்த இரண்டரை கோத்திரத்தினுடைய மறுமொழி. தேவன் உண்மையாகவே அவர் களுடைய வாழ்க்கையில் செயல்பட்டதை விலையேறப்பெற்றதாகக் கருதுகிறார்கள். எனவே, "எங்க ளுடைய புத்திரர்களுக்கும், எங்களுடைய பிள்ளைகளுக்கும் இந்தச் செயல்படுதல் அல்லது தேவனுடைய இடைப்படுதல் தேவை," என்பதை விரும்புகிறார்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்களின் வாழ்க்கையோடு தேவன் நேரடியான தொடர்புடையவராக இருக்கிறார். உள்ளான விதத்தில் அவர்களுடைய குணத்தோடு, அவர்களுடைய உள் ளமைப்போடு, அவர்களுடைய நபரோடு தேவன் இடைபடுகிறார்.

### *2. தேவனுடைய மக்கள் பரம வளங்களால் வாழ்கிறார்கள்*

இரண்டாவது, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்கள் பூமிக்குரிய வளங்களினால் அல்ல பரத்திற்குரிய வளங்களினால் வாழ்கிறார்கள்**. தேவனுடைய இராஜ்ஜியத்தில் பூமிக்குரிய வளம் எதுவும் இருக்காது. அவைகள் முடிந்துபோகும். அவைகள் இல்லாமல் போகும். ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவனுடைய பரம வளங்கள் அல்லது தேவனுடைய பரத்திற்குரிய வளங்கள் மட்டுமே அங்கு இருக்கும். எந்த இன்சூரன்ஸ், எந்த வைப்புநிதி, எந்தப் பாதுகாப்பைக் காட்டிலும் பரம வளங்கள் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும். நாம் தேவனுடைய பரம வளங்களினால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ முடியும் என்பதை பல நபர்களுடைய வாழ்க்கையில் நாம் காணலாம்.

### வனாந்தரத்தில் இஸ்ரயேல் மக்களுக்குப் பரம வளங்கள்

இஸ்ரயேல் மக்கள் நாற்பது வருடம் வனாந்தரத்தில் வாழ்கிறார்கள். வனாந்தரத்தில் இயற்கையான வளங் கள் அங்கு எங்கிருக்கிறது? இயற்கையான வளங்கள் அங்கு ஒன்றும் இல்லை. இயற்கையான வளங்கள் எதுவுமே இல்லை. ஆனாலும் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நாற்பது வருடமும் வனாந்தரத்தில் தேவனுடைய பரம வளங்களினால் வாழ்கிறார்கள். தேவனுடைய வளங்களினால் வாழ்கிறார்கள்.

### கேரீத்தில் எலியாவுக்குப் பரம வளங்கள்

எலியா பரம வளங்களினால் வாழ்கிறான். 1 இராஜாக்கள் 17ஆம் அதிகாரத்தில் எலியா ஆகாப் என்னும் இராஜாவினிடத்தில் "*இந்த வருடத்தில் மழையும் பனியும் பெய்யாது*" என்று கூறுகிறான். உடனே ஆண்ட வர், "*நீ யோர்தானுக்கு நேரே இருக்கிற கேரீத் என்னும் ஒரு ஆற்றுக்கு சென்று அங்கு ஒளித்துக்கொண் டிரு. நான் உன்னைக் காகத்தைக்கொண்டு போஷிப்பேன்,*" என்று கூறுகிறார். அந்த ஆற்றின் தண்ணீர் வற்றிப் போகும்வரை ஒவ்வொரு நாளும் காகம் விடியற்காலமும், சாயங்காலமும் அப்பமும் இறைச்சியும் எலியாவுக்கு கொண்டுவருகிறது. எலியா பரம வளங்களினால் வாழ்கிறான். அங்கு பூமிக்குரிய வளங் களுக்கு எந்த இடமும் இல்லை. பூமிக்குரிய வளங்கள் ஒன்றும் இல்லை. ஆனாலும் அவன் பரம வளங் களினால் வாழ்கிறான்.

அந்த ஆற்றின் தண்ணீர் வற்றிப்போனபிறகு, தேவன் அவனை சாறிபாத் என்னும் ஊருக்குச் செல்லச் சொல்லுகிறார். "அங்கு ஒரு விதவை இருக்கிறாள். அந்த விதவையை உன்னைக் கவனிப்பதற்காகக் கட் டளையிட்டிருக்கிறேன்," என்று கூறுகிறார். அந்த விதவையைச் சென்று பார்க்கிறான். அந்த விதவை விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருக்கிறாள். அவளிடம் "*எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா. கொஞ்சம் அப்பமும் கொண்டுவா,*" என்று கூறுகிறான். ஆனால் அவள், "என்னுடைய பாத்திரத்தில் ஒரு கைப்பிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெயும்தான் இருக்கிறது. அதைத்தவிர வேறு எந்த அடையும்

இல்லை," என்று கூறுகிறாள். அதற்கு எலியாவினுடைய மறுமொழி. "*கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையில் மா செலவழிந்து போவதும் இல்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்,*" (1 இராஜா. 17:14) என்றான். அவன் சொன்னதுபோல் மழை பெய்யும்வரை அந்தப் பானையில் மா செலவழிந்து போகவும் இல்லை; கலசத்தில் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை. எலியா முற்றிலும் பரம வளங் களை மட்டுமே சார்ந்து வாழ்ந்தான்.

**குறையாத பரம வளங்கள்**

பரம வளங்கள் ஒருபோதும் குறையாது. பரம வளங்கள் எப்போதும் நிறைவானவை. பூமிக்குரிய வளங்கள் இல்லாமல் போகும். பூமிக்குரிய வளங்கள் குறைந்து போகும். பூமிக்குரிய நன்மைகள் குறைந்து போகும். ஆனால், பரம வளங்கள், பரம நன்மைகள், எப்போதும் நிறைவாக இருக்கும். ஒருவேளை இந்தப் பரம வளங்களை, இந்தப் பரம நன்மைகளை, சற்றுத் தாமதமாகப் பெறலாம். தேவனிடமிருந்து ஒரு நன்மை யைத் தாமதமாகப் பெறலாம்.

அந்த நேரத்தில் சாத்தான் வந்து "நான் சொன்னேன் அல்லவா? தேவனுடைய வளம் என்று ஒன்று இல்லை. அதை ஏன் நம்பிக்கொண்டிருக்கிறாய்," என்று பொய் சொல்லுவான். ஆனால் நாம் தேவனுடைய வளங்களை நம்பி வாழலாம்.

**பெத்தானியா லாசருவுக்குப் பரம வளங்கள்**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலகட்டத்தில் பெத்தானியா ஊரில் லாசரு என்னும் ஒருவன் இருந்தான். அவன் மரியாள், மார்த்தாள் என்னும் சகோதரிகளோடு வாழ்ந்துகொண்டிருக்கிறான். அவன் மரிக்கும் தருவாயில் இருக்கிறான் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு செய்தி வருகிறது. அவர் உடனே போகவில்லை. அவர் தாம் இருந்த இடத்திலே மேலும் இரண்டு நாள் தங்கிவிடுகிறார். அவன் மரித்து நான்கு நாள் கழித்தபிறகுதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து லாசருவைச் சந்திக்கப் போகிறார். அதற்குப்பின்பு பூமிக்குரிய தளத்திலே லாசருவுக்கு எந்தவொரு நம்பிக்கையும் இல்லை. ஆனாலும், அவன் வாழ்கிறான், பரம வளங்களினால் வாழ்கிறான், தேவனிடத்திலிருக்கிற வளங்களினால் வாழ்கிறான். ஏன் அவன் தாமதமாக அந்த நன்மையைப் பெற்றுக்கொண்டான் என்றால் உண்மையாகவே ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து அவன் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றைக் கற்றுத்தர விரும்பினார். இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழுதலாகவும், ஜீவனாகவும் அவனுக்குக் கற்றுத்தர விரும்பினார். எனவே, அவன் தாமதமாக அந்த நன்மையைப் பெற்றுக்கொண்டான். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவ னுடைய மக்கள் பூமிக்குரிய வளங்களினால் அல்ல, பரம வளங்களினால் வாழ முடியும்.

என்னுடைய மூன்றாவது குறிப்பு, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மக்கள் நடக்கிற வழி சிலுவையின் வழி**, **உயிர்த்தெழுதலுக்கு நேராய் நடத்திச் செல்லும்**.

***3. தேவனுடைய மக்கள் நடக்கிற வழி உயிர்த்தெழுதலுக்குச் செல்லும் சிலுவை வழி***

யோசேப்பு இதற்கு அருமையான எடுத்துக்காட்டு. யோசேப்பு அடிமையாக விற்கப்படுகிறான். போத்திபார் என்னும் மனிதனிடம் வேலை பார்க்கிறான். அதன்பிறகு சிறைச்சாலையில் வாழ்கிறான். பின்பு அவன் உயிர்த்தெழுதலைக் காண்கிறான். அவன் முழு எகிப்திற்கும் அதிகாரியாக வாழ்கிறான்.

யோபு தன்னுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் இழக்கிறான். தன்னுடைய பிள்ளைகளை இழக்கிறான். தன்னுடைய ஆரோக்கியமான உடல்நிலையை இழக்கிறான். ஆனாலும் அவன் உயிர்த்தெழுதலைக் காண கிறான்.

எனவே, தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் நடக்கக்கூடிய வழி சிலுவையின் வழி. ஆனால் அங்கு உயிர்த்தெழுதல் நம்முடைய நம்பிக்கையாக இருக்கும். "*ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்*" (மத்.16:24) என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறுகிறார். சிலுவையே வழி. சிலுவையே தேவனுடைய குணங் களை, தேவன் விரும்புகிற, தேவன் களிகூருகிற ஒன்றை நம்முடைய வாழ்க்கையில் உருவாக்கக்கூடிய வழி. இந்த வழியில்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்கிறார். அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்றிருக்கிறது. அப்படி யிருக்க அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அதே வழியில், அதே சிலுவையின் வழியில்தான், தேவ னுடைய குணங்கள் நமக்குள் உருவாக்கப்பட முடியும்.

*“என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனெனில், நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். வாழ்ந்திருக்கவும் எனக் குத் தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரண மடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்”* (பிலி.4:11-12). இவர் எங்கு இதைக் கற்றுக்கொள்கிறார்? தேவனுடைய இராஜ்ஜியத்தில், தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாழ்க்கையில், அப்போஸ்தலனாகிய பவுல் இவைகளைக் கற்றுக்கொள்கிறார். சிலுவையின் வழியிலே இவைகளை கற்றுக்கொள்கிறார். மனரம் மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்றால் சிலுவையினூடாய் இவைகளைக் கற்றுக்கொள்கிறார்.

நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழும்போது நம்மை நெருக்குகிற, நம்மை ஒடுக்குகிற, நம்மை கஷ் டப்படுத்துகிற, நாம் சோர்ந்துபோகக்கூடிய பல சூழ்நிலைகள் வரும். ஆனால், நாம் பின்வாங்காமல் இந்த உயிர்த்தெழுதலைநோக்கி முன்னே செல்ல வேண்டும். *“பின்வாங்கிப்போவானேயாகில் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது,”* என்று கூறுகிறார்.

எனவே, தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற மக்கள் நடக்கிற வழி, சிலுவையின் வழி. ஆனாலும், அவர்கள் உயிர்த்தெழுதலைநோக்கி முன்னேறிச்செல்வார்கள்.

### *4. தேவனுடைய இராஜ்ஜியத்தின் மக்கள் வளர்ந்துகொண்டேயிருப்பார்கள்*

நான்காவது, **தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற மக்கள் ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைவார்கள்**. ஒவ்வொரு நாளும் எல்லா விதத்திலும் குணத்திலும், உள்ளமைப்பிலும், உள்ளான நபரிலும் இயேசு கிறிஸ்துவைப்போல வளர்ச்சியடைந்து கொண்டே இருப்பார்கள். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்ந் தால் போதும். அவர்கள் கண்டிப்பாக வளர்ச்சியடைவார்கள். மாற்கு 4:24-29இல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு உவமையைச் சொல்கிறார். ஒரு மனிதன் நிலத்தில் விதை விதைக்கிறான். விதைத்தபிறகு அவன் இரவில் தூங்குகிறான். காலையில் விழித்திருக்கிறான். ஆனால், அவனுக்குத் தெரியாமலேயே அந்த விதை வளருகிறது. காரணம் அந்த விதை நிலத்தில் இருக்கிறது. அந்த விதை நிலத்தில் இருப்பதால் அது வளர்ந்துவிடும்.

எனவே, நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வது அவசியம். நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதினால் கண்டிப்பாக நம்முடைய வாழ்க்கையின் இறுதியில் நம்முடைய வாழ்க்கை கனியுள்ள வாழ்க்கையாக மாறும். நம்முடைய வாழ்க்கையில் தேவன் விரும்புகின்ற ஒன்று உருவாக்கப்படும். இது உண்மை. “உன்னுடைய வாழ்க்கையைப் பார். இப்போதிருக்கிற உன் வாழ்க்கையைப் பார். உன்னுடைய நிலைமையைப் பார். நீ தேவனுக்குப் பிரியமானவனாய் இருக்கிறாயா?” என்றெல்லாம் சாத்தான் நம்மைச் சோர்ந்துபோகும்படிச் செய்வான். ஆனால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்கிற தேவனுடைய மனி தர்கள் ஒவ்வொரு நாளும் நிச்சயமாக வளர்ச்சியடைந்துகொண்டே இருப்பர்கள்.

“நான் நட்டேன். அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான். தேவனே விளையச்செய்தார்,” என்று அப்போஸ்தல னாகிய பவுல் கூறுகிறார். தேவன் விளையச்செய்வார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதே வழி. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் தொடர்ந்து வாழும்போது தேவன் அவருடைய குணங்களை நமக்குள் உருவாக்குவார், நம்மை வளரச்செய்வார்.

## III. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கு இயேசுவே வழி

தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் வாழ்வதற்கு என்ன வழி? மூன்றாவது குறிப்பு, நாம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் வாழ்வதற்கு என்ன வழி? என்ன வழி என்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே வழி. யோவான் 15:5இல் ஆண்டவராகிய இயேசு, *“என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது,”* என்று சொல்லுகிறார். இது நமக்குத் தெரியும்.

இந்த நான்கு உண்மைகளும் நமக்குத் தெரியும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவன் நம்முடைய வாழ்க்கையோடு செயல்படுகிறார் என்பது தெரியும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் இயற்கையான வளங் களினால் அல்ல, பரம வளங்களினால் வாழ முடியும் என்பது தெரியும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் நடக்கக்கூடிய வழி சிலுவையின் வழி, உயிர்த்தெழுதலுக்கு நேராய் நடத்தும் என்பது தெரியும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் வாழ்வதினால் ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைகிறோம் என்பது தெரியும்.

இது எப்படி நம்முடைய வாழ்க்கையில் நடைமுறையில் உண்மையாக மாறும்? இயேசுகிறிஸ்து இல்லாமல் இவைகள் நம்முடைய வாழ்க்கையில் உண்மையாகிறதில்லை; இவைகள் நம்முடைய வாழ்க்கையில் நடை பெறாது. எனவே, அவர் *“என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது,”* என்கிறார். தேவன்

நம்முடைய வாழ்க்கையில் செயல்பட வேண்டும் என்றால், அதாவது நம்முடைய உள்ளான நபரோடு, குணத்தோடு, செயல்பட வேண்டுமென்றால் அதற்கு இயேசுகிறிஸ்துவே வழி. "*நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்,*" என்றால் பிதா ஒரு மனிதனில் செயல்பட வேண்டும் என்றால் இயேசுகிறிஸ்துவே வழி. இயேசுகிறிஸ்துமூலமாகவே அவர் செயல்படுகிறார். இயேசுகிறிஸ்து இல்லாமல் இந்த நான்கு உண்மைகளும் நிஜமாகாது. நாம் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றாக்கப்பட வேண்டும். இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்படும்போது இந்த நான்கு உண்மைகளும் நம்முடைய வாழ்க்கையில் நிஜமாகும். நாம் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்படும்போது நாம் இயேசுகிறிஸ்துவால் வாழ்வோம். இயேசுகிறிஸ்துவால் வாழ்வது என்றால் இயேசுகிறிஸ்துவில் உள்ள வளங்களினால் வாழ்வதாகும். இயேசுகிறிஸ்துவில் உள்ள பரம வளங்களினால் வாழ்வோம். "*என் தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தினாலே உங்களுடைய குறைவுகளை கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார்*" (பிலி.4:19). உங்களுடைய குறைகள், குறைச்சல்கள், இல்லாமைகள் எல்லாவற்றையும் கிறிஸ்து இயேசுவில் உள்ள வளங்களினால் நிறைவாக்குவார் என்று பவுல் கூறுகிறார். நாம் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து செயல்படும்போது இயேசுகிறிஸ்துவால் வாழ்கிறோம், இயேசுகிறிஸ்துவில் உள்ள பரம வளங்களினால் வாழ்கிறோம், இயேசுகிறிஸ்துவில் உள்ள எல்லா வளங்களினாலும் வாழ் கிறோம்.

இந்தப் பூமியில் நமக்கு எண்ணற்ற தேவைகள் இருக்கும். எல்லா வளங்களும் இயேசுகிறிஸ்துவில் உள்ளன. தேவன் மனிதர்களுக்குத் தேவையான எல்லா வளங்களையும் இயேசுகிறிஸ்துவில் வைத்திருக் கிறார். எனவே, இயேசுகிறிஸ்துவில் உள்ள வளங்களினால் நாம் வாழ முடியும். நாம் இயேசுகிறிஸ்து வோடு ஒன்றாக்கப்படும்போது மட்டுமே இயேசுகிறிஸ்துவில் உள்ள பரம வளங்களினால் நாம் வாழ முடியும். "*என்னைப் புசிக்கிறவன் என்னாலே பிழைப்பான்,*" என்றால் நாம் இயேசுகிறிஸ்துவில் உள்ள வளங்களினால் வாழ முடியும் என்பதே அதன் பொருள். நாம் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்படும் போது இயேசுகிறிஸ்துவோடு வாழ்கிறோம். "*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன்*" (கலா. 2:20). நாம் அவரோடேகூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். "*கிறிஸ்துவுடனேகூட மரித்தீர்களானால் அவரோடேகூட பிழைத்தும் இருப்போம்*' (ரோமர் 6:8). அவரோடேகூட வாழ்வோம்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவனுடைய மக்கள் நடக்கிற வழி சிலுவையின் வழி. சிலுவையின் வழி யில் நாம் தனிமையாக, பின்வாங்காமல் முன்செல்ல முடியாது. அதே வழியில் நடந்த இயேசுகிறிஸ்து என்ற நபரோடு சேர்ந்து மட்டுமே சிலுவையின் வழியில் முன்செல்ல முடியும். ஏனென்றால், சிலுவையின் வழி அவ்வளவு நெருக்கமான, அவ்வளவு கஷ்டமான வழி. ஆனால் நமக்குமுன்பாக இதே வழியில் ஒரு நபர் நடந்திருக்கிறார். இதே வழியில் நடந்து, ஒரு நபர் உயிர்த்தெழுதலைக் கண்டிருக்கிறார். இந்த நபரோடு நாம் வாழும்போது நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பின்வாங்காமல் சிலுவையின் வழியில் உயிர்த்தெழுதலை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். ஏனென்றால் "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு.*" கிறிஸ்துவினுடைய பலத்தோடு நாம் முன்னேறிச் செல்லுகிறோம். இந்த இராஜ்ஜியத்தின் வாழ்க்கை என்பது சிலுவையின் வழி என்று நமக்குத் தெரியும். அதில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால் கிறிஸ்துவோடு சேர்ந்து சென்றால் தான் பின்வாங்காமல் உயிர்த்தெழுதலை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். இயேசுகிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தால் இயேசுகிறிஸ்துவில் வாழ்கிறோம்.

இயேசுகிறிஸ்துவில் வாழ்வது என்பது ஒரு புதிய தளத்தில், புதிய மண்டலத்தில், புதிய நபரில் நாம் வாழ்கிறோம். முன்பு இருளின் அதிகாரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தோம். மனித இராஜ்ஜியத்தில் வாழ்ந்துகொண்டிருந்தோம். ஆனால், இப்பொழுது தம்முடைய அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற் குள் உட்பிரவேசிக்கப் பண்ணியிருக்கிறார். நாம் ஒரு புதிய இராஜ்ஜியத்தில் வாழ்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் நபரில் வாழ்கிறோம். இயேசுகிறிஸ்துவில் வாழ்கிறோம். இயேசுகிறிஸ்துவில் வாழும்போது மட் டுமே நம்முடைய வாழ்க்கையின் இறுதியில் கனி இருக்கும். நம்முடைய வாழ்க்கையின் இறுதியில் தேவன் விரும்புகின்ற ஒன்றை நம்முடைய வாழ்க்கையில் உருவாக்கியிருப்பார். "*நானே திராட்சைச்செடி; நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்,*" (யோவான் 15:5) என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். இயேசுகிறிஸ்துவில் நாம் வாழவில்லை யென்றால் நாம் வளர்ச்சியடையப் போவதில்லை. ஒருபோதும் வளர்ச்சியடையப் போவதில்லை. ஆனால், நாம் இயேசுகிறிஸ்துவில் வாழ்கிறோம் என்றால் கண்டிப்பாக நம்முடைய உள்ளான விதத்தில் குணத் திலும், நபரிலும் இயேசுகிறிஸ்துவைப்போல நாம் வளர்ச்சியடைந்துகொண்டே இருப்போம்.

இந்த நான்கு உண்மைகளும் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறவேண்டுமென்றால் நாம் இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பட வேண்டும்; இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். அப்பொழுதுதான் நம்மால் இயேசுகிறிஸ்துவால், இந்தப் பரம வளங்களினால், வாழ முடியும்; இயேசுகிறிஸ்துவோடு சிலுவையின் வழியில் நடக்க முடியும்; உயிர்த்தெழுதலை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும்; இயேசுகிறிஸ்துவில் இந்த எல்லா நன்மைகளும் நமக்குள் உருவாக்கப்படும். எனவே, இயேசுகிறிஸ்துவே வழி.

## IV. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதின் விளைவு -- மறுசாயலாக்கப்படுதல்

என்னுடைய கடைசி குறிப்பு. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதினால் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய விளைவு என்னவென்றால் நாம் மறுசாயலாக்கப்படுவோம். நம்முடைய உள்ளான குணம், தேவனுடைய குணத்திற்கு ஒத்த, இயேசுகிறிஸ்துவினுடைய குணத்திற்கு ஒத்த, குணமாக மாற்றப்படும். தேவனுடைய இராஜ்ஜியம் இல்லையென்றால் அப்படிப்பட்ட ஒரு குணம் நமக்குள் உருவாக்கப்பட முடியாது. இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்பட்ட ஒரு வாழ்க்கை நாம் வாழாமல், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழாமல், நமக்குள் இயேசுகிறிஸ்துவினுடைய குணமும், இயேசுகிறிஸ்துவினுடைய உள்ளமைப்பும், உருவாக்கப்பட முடியாது; நாம் மறுசாயலாக்கப்பட முடியாது.

மறுசாயலாக்கப்படுதல் என்றால் நம்முடைய புறம்பான நடக்கைகளை நாம் சீர்படுத்துவதல்ல. மறுசாயலாக்கப்படுதல் என்பது நம்முடைய உள்ளான குணத்தோடு தேவன் இடைப்படுவது; நம்முடைய இருதயத்தோடு தேவன் இடைப்படுவது. யூதர்கள் தங்கள் புறம்பான நடக்கைகளைச் சீர்படுத்துவதைக்குறித்து மிகவும் அக்கறையாக இருப்பார்கள். "கொலை செய்யாதிருப்பாயாக என்று தேவன் கூறியிருக்கிறார். எனவே, எவ்வளவு கஷ்டப்பட்டு வேண்டுமானாலும் நான் கொலைசெய்யாமல் இருந்துவிடுவேன். அதனால் நான் தேவனைப் பிரியப்படுத்திவிடுவேன்," என்று அவர்கள் எண்ணுவார்கள். அவர்கள் தேவனுடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும் தவறாகப் புரிந்திருக்கிறார்கள்.

### புறம்பான நடக்கையல்ல, உள்ளான குணம் மாறுதல்

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுடைய இருதயத்தோடுதான் செயல்பட விரும்புகிறார். "கொலை செய்யாதிருப்பாயாக. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக," என்று சொல்லும்போது "நான் உன்னுடைய இருதயத்தோடு இடைப்பட விரும்புகிறேன்," என்றே தேவன் கூறுகிறார். ஆனால், அவர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் தங்கள் நடக்கைகளைச் சீர்படுத்திக்கொள்கிறார்கள்; கோபப்படாமல் அடக்கிக் கொள்கிறார்கள். தேவன் இதை விரும்பவில்லை. தேவன் நம்முடைய உள்ளான இருதயத்தோடு இடைப்பட விரும்புகிறார். எனவேதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்," (மத். 5:20) என்று கூறுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதினால் நம்முடைய இருதயத்தோடு தேவன் இடைப்படுகிறார். அவர்களைப்போல நம்முடைய புறம்பான நடக்கைகளைச் சீர்படுத்துவதை தேவன் விரும்பவில்லை. மாறாக, நம்முடைய இருதயத்தோடு இடைப்படுவதற்கு தேவன் விரும்புகிறார்; நம்முடைய இருதயத்தோடு இடைப்பட்டு ஆவியின் கனியை நமக்குள் உருவாக்க விரும்புகிறார்.

பொதுவாக தேவனுடைய மக்களிடத்தில் பல பிரச்சினைகள் உண்டு. நம்முடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு இயேசுகிறிஸ்துவே. "என் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு அவரே," என்று நாம் பாடல்கள் கூடப் பாடுவோம். இது பாடுவதற்கு நன்றாக இருக்கிறது என்பதால் பாடுகிறோமா அல்லது உண்மையாகவே இது உண்மையா? இது உண்மை. உண்மையாகவே நம்முடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு இருக்கிறது. "நான் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபிறகுதான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் அதிகமாயிருக்கின்றன," என்று ஒரு சில கிறிஸ்தவர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் அது உண்மை. உண்மையாகவே எனக்குப் பிரச்சினைகள் வராவிட்டால் என்னுடைய இருதயத்தின் நிலை எப்படித் தெரியும். என்னுடைய இருதயம் தேவனுக்குமுன்பாக சரிசெய்யப்பட வேண்டும் என்பது எப்படி எனக்குத் தெரியும். எனக்குப் பிரச்சினை வரும்போதுதான் என்னுடைய இருதயத்தின் நிலை இப்படி இருக்கிறது என்பதே எனக்குத் தெரியும். அப்பொழுதான் என்னுடைய இருதயத்தில் செயல்படுவதற்கு, இடைப்படுவதற்கு, நான் இயேசுகிறிஸ்துவோடு இணங்கி செயல்படுவேன்.

### தேவ மக்களின் பிரச்சினை

பொதுவாக தேவனுடைய மக்களிடத்தில் இருக்கக்கூடிய இரண்டு பிரச்சினைகள் என்னவென்றால் ஒன்று உறவில் பிரச்சினை. இரண்டாவது பணப்பிரச்சினை. அந்த உறவு கணவன் மனைவி உறவாக இருக்கலாம் அல்லது பெற்றோர் பிள்ளை உறவாக இருக்கலாம் அல்லது சகோதரர்களாக இருக்கலாம். எந்த உறவாக

வேண்டுமானாலும் இருக்கலாம். உறவில் வரும் பிரச்சினையோடு எப்படி இடைப்படுவார்கள் என்றால் "இந்தப் பிரச்சினைக்கு யார் காரணம். நீதான் காரணமா? நீ மனந்திரும்பு" என்கிற பாணியில் செயல்படு வார்கள். ஆனால், தேவனுடைய மக்கள் இந்தப் பிரச்சினையோடு இப்படி இடைப்படவேண்டுமென்று தேவன் விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையின் உண்மையான ஊற்று எது? எங்கிருந்து இந்தப் பிரச் சினை ஆரம்பிக்கிறது? உண்மையாகவே அந்தப் பிரச்சினை என்னோடு தொடர்பிலிருக்கிற அந்த நபரின் மீதுதான் அந்தத் தவறு இருந்தது என்றால் எனக்குள் இன்னும் பொறுமை என்னும் கிறிஸ்து உருவாக்கப் படவில்லை என்று அர்த்தம் அல்லது தவறு என்மீது இருக்கிறதென்றால் எனக்குள் இன்னும் அன்பு என்னும் கிறிஸ்து உருவாக்கப்படவில்லை என்று அர்த்தம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தொடக்கம் நம் முடைய இருதயத்திலிருந்துதான் வருகிறது. புறம்பாக நாம் அந்த நபரையோ, நடக்கைகளையோ, சரிப் படுத்துவதினால் மறுசாயலாக்கப்படுவதில்லை. நம்முடைய இருதயம் தேவனுக்குமுன்பாக சரிசெய்யப் படும்போது மட்டுமே மறுசாயலாக்கப்படுகிறோம் அல்லது தேவனுடைய குணங்கள் நமக்குள் உருவாக்கப் படுகிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய குணத்தோடு இடைப்பட முடியும்.

இரண்டாவது பிரச்சினை. பணப்பிரச்சினை. பணப்பிரச்சினையோடு தேவனுடைய மக்கள் எப்படி ஈடுபடு வார்கள் அல்லது இடைப்படுவார்கள் என்றால் எதற்காக பணப்பிரச்சினை வருகிறது என்று வைத்துக் கொள்வோம். ஒரு சாதாரணமான வேலையில் இருக்கிறான். ஒரு நல்ல வேலைக்குச் சென்றால் பணப் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்றால் தீர்ந்துவிடாது. பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கும்போது பணப்பிரச்சினை இருந்தால் ஐம்பதாயிரம் சம்பாதிக்கும்போது இன்னும் அதிகமான பணப்பிரச்சினைதான் வருமேதவிர, பணப்பிரச்சினை ஒன்றும் குறையாது. ஏனென்றால், பிரச்சினை என்னுடைய இருதயத்தில் இருக்கிறது. என்னுடைய இருதயத்தோடு தேவன் இடைப்பட விரும்புகிறார். பிரச்சினை என்னுடைய வேலையில் அல்ல. அதற்காக நான் பத்தாயிரம் சம்பளத்தில்தான் இருக்க வேண்டும் என்று கூறவில்லை. எல்லா வற்றிலும் முயற்சி செய்ய வேண்டும். நாம் அதிகமாக சம்பாதிக்க வேண்டும். அவைகளெல்லாம் உண்மை. ஆனால், அவைகள் நம்முடைய உண்மையான பிரச்சினை அல்ல. பிரச்சினை நம்முடைய இருதயத்தில் இருக்கிறது. எனக்குள் இச்சையடக்கம் என்னும் கிறிஸ்து உருவாக்கப்படவில்லை என்று அர்த்தம்.

இப்படிப் பல பிரச்சினைகள் உண்டு. எல்லாப் பிரச்சினைகளுக்கும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் தீர்வு உண்டு. எல்லா பிரச்சினைகளுக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் தீர்வு உண்டு. வழி என்னவென் றால் நாம் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். இயேசுகிறிஸ்துவால் வாழ வேண்டும். இயேசுகிறிஸ்துவில் உள்ள பரம வளங்களினால் நாம் வாழ வேண்டும். இயேசுகிறிஸ்துவோடு வாழ வேண்டும். இயேசுகிறிஸ்துவோடு இந்த சிலுவையில் வழியில் உயிர்த்தெழுதலை நோக்கி எதிர் நோக்கிச் செல்ல வேண்டும். இயேசுகிறிஸ்துவில் வாழ வேண்டும். இயேசுகிறிஸ்துவில் வாழும்போது அவருடைய குணங்கள் நமக்குள் உருவாக்கப்படும். தேவன் விரும்புகிற கனி நிறைந்த வாழ்க்கை நம் முடைய வாழ்க்கையின் இறுதியில் இருக்கும் அல்லது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒத்த குணம் நமக்குள் உருவாக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் உட்பிரவேசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தில் தொடர்ந்து வாழ்ந்து, இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாகி இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்து, ஆவியின் கனி நமக்குள் உருவாக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, சாந்தம், நற்குணம், விசுவாசம், இச்சையடக்கம் ஆகிய எல்லாக் கனி களையும் தேவன் நம்முடைய வாழ்க்கையில் உருவாக்குவார். நம்முடைய பொறுப்பு நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ வேண்டும்; தேவனுடைய இராஜ்ஜியத்தில் தொடர்ந்து வாழ வேண்டும். நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் தொடர்ந்து வாழவேண்டும் என்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு வாழ வேண்டும்; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் வாழ வேண்டும்; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் வாழ வேண்டும். இப்படி நாம் வாழும்போது தேவன் விரும்புகிற கனி நிறைந்த வாழ்க்கை நம்முடைய வாழ்க்கையில் இருக்கும். தேவன் நம்மை மறுசாயலாக்குவார். ஆமென்.